**செப்டம்பர் – 22**

# TNPSC துளிகள்

- நீரிழிவு நோய்ப் பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சிக்காக அவர் ஆற்றிய வாழ்நாள் அளவிலான பங்களிப்பை அங்கீகரித்து, நீரிழிவு நோய்க்கான ஐரோப்பியச் சங்கத்திடமிருந்து 2025 ஆம் ஆண்டிற்கான நீரிழிவு நோய்க்கான உலகளாவிய தாக்கப் பரிசை டாக்டர் V. மோகன் பெற்றுள்ளார்.
- மத்தியப் பிரதேசத்தின் தார் மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ள இந்தியாவின் முதல் பிரதான் மந்திரி மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடை (PM MITRA) பூங்காவிற்குப் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம்





- தமிழ்நாடு முதலமைச்சர் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் தேதியன்று சென்னையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையத்தினை (TANSHA) திறந்து வைத்தார்.
- இந்த ஆணையத்தின் அதிகாரப் பூர்வச் சின்னத்தையும் முதலமைச்சர் வெளியிட்டார்.
- மாநில அரசானது 2024 ஆம் ஆண்டில் TANSHA ஆணையத்தினை நிறுவியது.
- TANSHA, தமிழ்நாட்டில் உள்ள நான்கு வழித்தடங்கள் கொண்ட சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகள் உள்ளிட்ட முக்கியச் சாலை உள்கட்டமைப்புத் திட்டங்களைப் பொது - தனியார் கூட்டாண்மை மூலம் செயல்படுத்தும்.

## பூம்புகாரில் ஆழ்கடல் ஆய்வு

- தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறையானது பூம்புகார் கடற்கரையில் கடலடி தொல்பொருள் ஆய்வுகளைத் தொடங்கியது.

- இருபது ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் தேதியன்று இந்த ஆய்வு தொடங்கியது.
- இந்தத் திட்டமானது இந்தியக் கடல்சார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற் கொள்ளப் படுகிறது.
- காவேரிப் பூம்பட்டினம் என்றும் அழைக்கப்படும் பூம்புகார் என்பது மயிலாடுதுறை மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பில் பக்கவாட்டில் ஊடுருவி ஆய்வு செய்யக்கூடிய சோனார், எதிரொலி ஆழமானி, ROV (தொலைதூரத்தில் இருந்து இயக்கப்படும் வாகனம்) மற்றும் கடலடி நிலப்பரப்பு ஆய்வுக் கருவிகள் போன்ற மேம்பட்ட உபகரணங்கள் அடங்கும்.




# தேசியச் செய்திகள்

## பிரிவு 498A தொடர்பான வழக்குகள்


- பிரிவு 498A தொடர்பான வழக்குகளில் இரண்டு மாத 'அவகாச காலம்' அறிமுகப் படுத்தும் அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் 2022 ஆம் ஆண்டு வழிகாட்டுதல்களை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.
- இந்த அவகாச காலத்தில், எந்தக் கட்டாய நடவடிக்கையும் எடுக்க முடியாது என்பதோடு மேலும் இந்த விவகாரம் குடும்ப நலக் குழுவிற்கு (FWC) பரிந்துரைக்கப் படுகிறது.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் தேதியன்று தீர்ப்பளிக்கப்பட்ட ஷிவாங்கி பன்சல் மற்றும் சாஹிப் பன்சல் வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
- அவகாச காலம் ஆனது, நீதியை தாமதப்படுத்துவதாகவும் குற்றவியல் நீதி நிறுவனங்களின் சுயாட்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் விமர்சகர்கள் கூறுகின்றனர்.
- திருமணக் கட்டமைப்புகளில் பெண்களுக்கு எதிரான கொடுமையை நிவர்த்தி செய்வதற்காக 498A பிரிவானது முதலில் இயற்றப்பட்டது.
- நீதிமன்றங்கள் ஆனது முன்னதாக முதற்கட்ட விசாரணை, கைது வழிகாட்டுதல்கள்

(அர்னேஷ் குமார், 2014) மற்றும் பிணை ஆணை/ஜாமீன் தொடர்பான பாதுகாப்புகள் (சதேந்தர் குமார் அன்டில், 2022) போன்ற கருத்தாக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளன.

- இராஜேஷ் சர்மா (2017) வழக்கில் இதே போன்ற FWC மாதிரியானது, மனவ் அதிகாருக்கான (மனித உரிமைகள்) (2018) சமூக நடவடிக்கை மன்றம் என்ற வழக்கில் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வினால் ரத்து செய்யப்பட்டது.




## திருத்தப்பட்ட EVM வாக்குச்சீட்டு வடிவமைப்பு




- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது, 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளின் 49Bவது விதியின் கீழ் EVM வாக்குச்சீட்டுகளுக்கான வழிகாட்டுதல்களை திருத்தி

உள்ளது.

- தற்போது அடையாளத்தை மேம்படுத்துவதற்காக, வேட்பாளர்களின் வண்ணப் புகைப்படங்கள் ஆனது EVM வாக்குச்சீட்டுகளில் அச்சிடப் படும்.
- வேட்பாளர்களின் வரிசை எண்கள் மற்றும் மேற்கூறிய எதுவும் இல்லை (NOTA) என்ற விருப்பத் தேர்வானது சர்வதேச எண்ணிம வடிவிலான இந்திய எண்களில் அச்சிடப் படும்.
- இந்த வரிசை எண்கள் ஆனது சிறந்த தெளிவுக்காக ஓர் குறிப்பிட்ட அளவுடன் கூடிய தடிமனான எழுத்துருவைப் பயன்படுத்தும்.
- வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் NOTA ஆகியவை எளிதாகப் படிக்கக்கூடிய வகையில் சீரான எழுத்துரு வகை மற்றும் அளவில் அச்சிடப் படும்.
- வரையறுக்கப்பட்ட RGB மதிப்புகளின் அடிப்படையில் சட்டமன்றத் தேர்தல்களுக்கு குறிப்பிட்ட இளஞ்சிவப்பு நிறத்தில் EVM வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படும்.

### சேவா பர்வ் 2025 - முக்கியச் சிறப்பம்சங்கள்




- பிரதமர் நரேந்திர மோடியின் 75வது பிறந்தநாளைக் குறிக்கும் வகையில், சேவா பர்வ் 2025 ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதியன்று பாஜக கட்சியினால் தொடங்கப் பட்டது.
- NaMo செயலியில் நடத்தப்படுகின்ற இந்த 15 நாட்கள் அளவிலான தன்னார்வ டிஜிட்டல் பிரச்சாரம் ஆனது, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.
- இந்த முன்னெடுப்பு ஆனது "சேவா ஹே சங்கல்ப், இராஷ்ட்ர பிரதம் ஹே பிரேர்ணா" என்ற கருத்துருவினை அடிப்படையாகக் கொண்டது.

## சர்வதேசச் செய்திகள்

### காசாவில் இனப்படுகொலை

- பல ஆண்டு கால விசாரணைக்குப் பிறகு, இஸ்ரேலிய அதிகாரிகள் காசாவில் இனப் படுகொலை செய்துள்ளதாக ஐ.நா. விசாரணை ஆணையம் முடிவு செய்தது.
- மனித உரிமை அமைப்புகள் மற்றும் இனப்படுகொலை குறித்த அறிஞர்களின் நீண்ட காலக் குற்றச்சாட்டுகளையும் இது உறுதிப்படுத்துகிறது.
- ஐந்து இனப்படுகொலைச் செயல்களில் பின்வரும் நான்கிற்கு ஆணையம் "நியாயமான காரணங்களை" கண்டறிந்தது:
    - ஒரு சமூகத்தின் உறுப்பினர்களைக் கொல்வது,

- கடுமையான உடல் மற்றும் மன ரீதியான தீங்கு விளைவிப்பது,
- ஒரு குழுவை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகள், மற்றும்
- அக்குழுவில் பிறப்புகளைத் தடுப்பது.

❖ காசாவில் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக ஒரு இனப்படுகொலைப் பிரச்சாரத்தை ஏற்பாடு செய்ததற்கான பொறுப்பினை உயர் நிலை இஸ்ரேலிய அதிகாரிகள் ஏற்க வேண்டும் என்று ஐ.நா. குழு கூறியது.

❖ இனப்படுகொலையில் இருந்து தப்பியவர்களால் நிறுவப்பட்ட இஸ்ரேல், அதன் நடவடிக்கைகள் காரணமாக தொடர்ச்சியான தரைவழித் தாக்குதல்கள் மற்றும் சர்வதேச சட்டத்தைப் புறக்கணித்தல் காரணமாக தற்போது உலகளாவிய தனிமைப் படுத்தலை எதிர்கொள்கிறது.




## பொருளாதாரச் செய்திகள்

### ஒழுங்குமுறை மறுஆய்வுப் பிரிவு

❖ இந்திய ரிசர்வ் வங்கியானது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் வகையில் ஓர் ஒழுங்குமுறை மறுஆய்வுப் பிரிவை (RRC) நிறுவுகிறது, இது ஐந்து முதல் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை அனைத்து வங்கி விதிமுறைகளையும் முறையாக மதிப்பாய்வு செய்யும்.

❖ ஒழுங்குமுறைத் துறையின் கீழ் செயல்படும் RRC வங்கிகள் மற்றும் பிற ஒழுங்கு படுத்தப் பட்ட நிறுவனங்களைப் பாதிக்கும் விதிகளை கட்டம் கட்டமாக மதிப்பாய்வு செய்யும்.

❖ மறுஆய்வு செயல்பாட்டில் வெளிப்புற நிபுணர் கருத்துக்களைக் கொண்டு வருவதற்காக ஒழுங்குமுறை குறித்த ஒரு சுயாதீன ஆலோசனைக் குழு (AGR) உருவாக்கப் பட்டுள்ளது.

❖ முதல் கட்டமாக மூன்று ஆண்டுகளுடன், ஆறு உறுப்பினர்களைக் கொண்ட AGR, பங்கு தாரர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவதையும், தொழில்துறை நிபுணத்துவத்தைப்

பயன்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது, மேலும் அதன் செயல்பாட்டுக் காலம் கூடுதலாக இரண்டு ஆண்டுகளுக்கு புதுப்பிக்கத்தக்கது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நீர் சார்ந்த ஹைட்ரஜன் எரிபொருள்





- HONC கேஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை ஹைட்ரஜன் வாயுவாக மாற்றும் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.
- இந்த நிறுவனமானது, தமிழ்நாட்டின் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அவினாசியில் அமைந்துள்ளது.
- இந்தத் தொழில்நுட்பமானது, தனியுரிம பல நிலை மின்னாற்பகுப்பு மற்றும் எரிவாயு கலப்பு கலவை செயல்முறையைப் பயன்படுத்துகிறது.
- இந்தச் செயல்முறையானது கார்பன் உமிழ்வுகள் இல்லாமல் சுத்திகரிக்கப்பட்ட நீரிலிருந்து உடனடியாக ஹைட்ரஜன் எரிபொருளை உருவாக்குகிறது.
- இந்தக் கண்டுபிடிப்பில் துல்லியமான ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் கலவையை உருவாக்கும் கைராய்டு எலக்ட்ரோலைட் சவ்வு (GEM) அடங்கும்.

- GEM தொழில்நுட்பம் சேமிப்பு அல்லது அழுத்தம் இல்லாமல் தேவைக்கேற்ப ஹைட்ரஜன் எரிபொருள் உற்பத்தியைச் செயல்படுத்துகிறது.
- இந்த அமைப்பானது நேரடி மின்னோட்டம் (DC) அல்லது சூரிய சக்தியைப் பயன்படுத்துகிறது மற்றும் செயல்பாட்டின் போது ஆற்றலை மறுசுழற்சி செய்கிறது.
- இந்த மின்னியற்றிகள் குறைந்தபட்ச தண்ணீரைப் பயன்படுத்துகின்றன, மேலும் அவை முழுமையாக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டவையாகும்.
- இந்த தொழில்நுட்பமானது காப்புரிமை செயல்முறையை நிறைவு செய்துள்ளது.
- இது மாநில மற்றும் மத்திய அரசு அதிகாரிகளிடம் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப் பட்டு உள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## உலகளாவியப் புத்தாக்கக் குறியீடு 2025




- இந்த அறிக்கையானது, உலக அறிவுசார் சொத்து அமைப்பு (WIPO) வெளியிட்டது.
- சுவிட்சர்லாந்து 66 மதிப்பெண்களுடன் முதலிடத்திலும், சுவீடன் 62.6 மதிப்பெண்களுடன் இரண்டாவது இடத்திலும், அமெரிக்கா 61.7 மதிப்பெண்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- சீனா 56.6 மதிப்பெண்களுடன் பத்தாவது இடத்திலும், காப்புரிமை தாக்கல்களில் முன்னணியிலும் உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 48வது இடத்தில் இருந்த இந்தியா உலகளவில் 38வது இடத்தில் உள்ளது.
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- மத்திய மற்றும் தெற்காசிய பிராந்தியத்திலும் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- அறிவு மற்றும் தொழில்நுட்ப வெளியீடுகளில் சிறப்பானச் செயல்பாட்டுடன் இந்தியா 22வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் சந்தை நுட்பம் உலகளவில் 38வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் மிகக் குறைந்தத் தர வரிசையில் வணிக நுட்பம் (64வது இடம்), உள் கட்டமைப்பு (61வது இடம்) மற்றும் நிறுவனங்கள் (58வது இடம்) உள்ளன.

- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வளர்ச்சியானது 2024 ஆம் ஆண்டில் 2.9 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வளர்ச்சியானது 2025 ஆம் ஆண்டில் 2.3 சதவீதமாகக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் வருடாந்திர அறிக்கை 2024




2.11 Maritime Trafficking routes & 2024 Seizures - India

- போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் (NCB) 2024 ஆம் ஆண்டு வருடாந்திர அறிக்கையின் படி, பஞ்சாப் அரசு 1,150 கிலோ ஹெராயினைக் கைப்பற்றியது.
- நாட்டின் மக்கள் தொகையில் 2.3% மட்டுமே கொண்டுள்ள பஞ்சாபில் இந்தியாவின் ஹெராயின் பறிமுதல்களில் 44.5% பறிமுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் கைப்பற்றப்பட்ட மொத்த ஹெராயின் 2,596 கிலோ ஆகும்.
- 2024 ஆம் ஆண்டில் சுமார் 234 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டு புது டெல்லி இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 2.94 கோடி மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், போதைப் பொருள் மாத்திரைகள் பறிமுதல் செய்வதில் பஞ்சாப் முன்னிலை வகிக்கிறது.
- 51 லட்சம் போதைப்பொருள் மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டு உத்தரப் பிரதேசம் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் மூன்று மருந்துப் பறிமுதல்களுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில், ஆளில்லா வாகனம் தொடர்பான 179 போதைப்பொருள் பறிமுதல் செய்யப் பட்டது.
- பஞ்சாபில் 187 கிலோ ஹெராயின், 5.4 கிலோ மெத்தம்பேட்டமைன் மற்றும் 4.2 கிலோ ஓபியம் உள்ளிட்ட 163 மருந்து பறிமுதல் செய்யப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக இந்தியாவில் கைது செய்யப்பட்ட வெளிநாட்டினரில் 203 பேர் கைது செய்யப்பட்டதுடன் நேபாள நாட்டினர் முதலிடத்தில் உள்ளனர்.

- 2024 ஆம் ஆண்டில் போதைப்பொருள் வழக்குகளில் 106 வெளிநாட்டினர் கைது செய்யப் பட்ட நிலையில் நைஜீரியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

## IEA அறிக்கை 2025




- உலகளாவிய எண்ணெய் மற்றும் எரிவாயுக் கிணறுகள் முன்பை விட வேகமாக குறைந்து வருவதாக சர்வதேச எரிசக்தி முகமை (IEA) எச்சரித்தது.
- அதன் கச்சா எண்ணெய்யில் 85 சதவீதத்திற்கும் மேலாகவும், அதன் எரிவாயுவில் 45 சதவீதத்திற்கும் மேலாகவும் இறக்குமதி செய்யும் இந்தியா இதனால் குறிப்பாக பாதிக்கப் படக் கூடியது.
- சுமார் 90 சதவீத மேல்மட்ட எண்ணெய் மற்றும் எரிவாயு முதலீடு தற்போதுள்ள கிணறுகளில் இயற்கையான சரிவை ஈடுசெய்யப் பயன்படுத்தப்படுகிறது.
- புதிய முதலீடு இல்லாமல், உலகளாவிய எண்ணெய் உற்பத்தியானது ஒவ்வோர் ஆண்டும் ஒரு நாளைக்கு 5.5 மில்லியன் பீப்பாய்கள் குறையக்கூடும்.
- முதல் ஆண்டில் உற்பத்தி 35 சதவீதத்திற்கும் மேலாகக் குறைந்ததுடன் ஷேல் (களிப் பாறை) மற்றும் கடல்சார் கிணறுகளின் மட்டங்கள் வேகமாகக் குறைகின்றன.
- IEA இந்தியாவை ஆதாரங்களை பல்வகைப்படுத்தவும், உள்நாட்டு ஆய்வுகளை விரிவுபடுத்தவும், பல தூய்மையான மாற்று வழிகளை ஏற்றுக் கொள்ளவும் வேண்டி வலியுறுத்தியது.
- புதிய எண்ணெய் மற்றும் எரிவாயுத் திட்டங்களுக்கு உரிமம் பெறுவதிலிருந்து உற்பத்திக்கு சுமார் 20 ஆண்டுகள் ஆகும் என்பதோடு இது நீண்ட கால அபாயங்களை எழுப்புகிறது.

# மாநிலச் செய்திகள்

## அசாமில் பொருளாதார முற்றுகை

- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதியன்று அசாமின் டின்சுகியா மாவட்டத்தில் மோரன் சமூகத்தினர் காலவரையற்ற பொருளாதார முற்றுகையைத் தொடங்கினர்.
- இந்த முற்றுகையானது எண்ணெய், நிலக்கரி, தேயிலை மற்றும் மரம் போன்ற முக்கிய

வளங்களின் போக்குவரத்தை மாவட்டம் வழியாக மேற்கொள்வதை நிறுத்தியது.

❖ இந்தப் போராட்டத்தை மற்ற ஆறு மோரன் அமைப்புகளின் ஆதரவுடன் ஆல்-மோரன் மாணவர் சங்கம் (AMSU) வழிநடத்துகிறது.

❖ இந்த சமூகமானது பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) அந்தஸ்தையும் மோரன் தன்னாட்சி சபையின் அரசியலமைப்பு மேம்படுத்தலையும் கோருகிறது.

❖ தற்போது, மோரன் சபையானது மாநிலச் சட்டத்தின் கீழ் செயல்படுகிறது, மேலும் ஆறாவது அட்டவணையின் கீழான அரசியலமைப்பு பாதுகாப்புகளைப் பெற்றிருக்கவில்லை.

❖ இந்த முற்றுகையின் பொருளாதாரத் தாக்கமானது, பிராந்தியத் தொழில்களில் அவசர அரசாங்க தலையீட்டிற்கான கோரிக்கைகளை எழுப்பியுள்ளது.




## சாம்பாஜி மகாராஜ் சிலை





❖ புனேவின் பிம்ப்ரி-சின்ச்வாட்டில் உள்ள மோஷியில் சத்ரபதி சாம்பாஜி மகாராஜின் பிரம்மாண்டமான சிலை கட்டப்பட்டு வருகிறது.

- கட்டி முடிக்கப்பட்டதும், சத்ரபதி சம்பாஜி மகாராஜுக்காக கட்டமைக்கப்பட்ட உலகின் மிக உயரமான சிலையாக இது இருக்கும்.
- இலண்டன் சாதனைப் புத்தகமானது சம்பாஜி மகாராஜுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக என்று சாதனை அளவிலான பங்கேற்பு நிகழ்வை நடத்தியதற்காக அறக்கட்டளையை கௌரவித்தது.

## சிகப்பு வழித்தடத்தில் உள்ள வனப் போர் பயிற்சிப் பள்ளி

- சத்தீஸ்கரின் பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள முன்னாள் மாவோயிஸ்ட் தளமான கர்ரேகுட்டா மலைகளில் அரசாங்கம் ஒரு வனப் போர் பயிற்சிப் பள்ளியை அமைத்து வருகிறது.
- இந்தப் பள்ளி மத்திய சேமக் காவல் படை (CRPF), சத்தீஸ்கர் காவல்துறை மற்றும் உறுதி கொண்ட செயலுக்கான அதிரடிப்படை பிரிவு (COBRA) போன்ற படைகளுக்குச் சிறப்பு வன மற்றும் குகை சார் நடவடிக்கை உத்திகளில் பயிற்சி அளிக்கும்.
- குகைகள் மற்றும் நீர்வீழ்ச்சிகள் உள்ளிட்ட கடினமான நிலப்பரப்பைக் கொண்ட கர்ரேகுட்டா மலைகள், ஒரு பெரிய CRPF நடவடிக்கைக்குப் பிறகு 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நக்சல் கட்டுப்பாட்டிலிருந்து அகற்றப்பட்டன.
- இந்த உண்மையான நிலப்பரப்பு ஆனது பயிற்சித் தரத்தை மேம்படுத்த உதவும்.
- தற்போது இது போன்றப் பணிகளுக்காக சுமார் 100 படைப்பிரிவுகள் நிலை நிறுத்தப் பட்டுள்ளதுடன் CRPF ஆனது எதிர்ப்புக் கிளர்ச்சி மற்றும் நக்சல் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## NECA 2025 விருதுகள்


- உள்ளடக்க உருவாக்குநர்கள் மற்றும் தாக்கத்தினை உண்டாக்கும் கருத்து வழங்கீட்டாளர்களுக்காக 2025 ஆம் ஆண்டு தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருதுகளின் (NECA) கீழ் எரிசக்தி திறன் வாரியம் ஒரு புதிய வகையை அறிமுகப்படுத்துகிறது.

- இந்த முன்னெடுப்பு ஆனது ஆற்றல் திறன், வளங்காப்பு மற்றும் நிலையான வாழ்க்கை நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்க என்று டிஜிட்டல் ஊடகங்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1991 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட NECA ஆனது பல்வேறு துறைகளில் எரிசக்தி வளங் காப்பில் சிறந்து விளங்கும் அமைப்புகளை அங்கீகரிக்கும் ஒரு மதிப்பு மிக்கத் தளமாகும்.




## முக்கிய தினங்கள்

### பொறியாளர்கள் தினம் 2025 - செப்டம்பர் 15




- இத்தினமானது, இந்தியாவின் சிறந்தப் பொறியாளர்களில் ஒருவரான சர் மோக்ச குண்டம் விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறது.
- 1912 ஆம் ஆண்டில், மைசூரின் 19வது திவானாக நியமிக்கப்பட்ட அவர், "நவீன மைசூரின் கட்டமைப்பாளர்" என்ற பட்டத்தைப் பெற்றார்.
- அவர் ஒஸ்மான் சாகர் மற்றும் ஹிமாயத் சாகர் போன்ற நீர்த் தேக்கங்களை வடிவமைத்து முறையான வெள்ளக் கட்டுப்பாட்டு தீர்வுகளை முன்மொழிந்தார்.

- 1932 ஆம் ஆண்டில் கிருஷ்ண இராஜ சாகரா (KRS) அணையைக் கட்டிய அவர், ஆசியாவின் மிகப்பெரிய நீர்த்தேக்கத்தை உருவாக்கி மாண்டியா என்ற பகுதியின் வேளாண்மையினை மாற்றியமைத்தார்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Deep Tech & Engineering Excellence: Driving India's Techade" என்பதாகும்.

## உலக ஓசோன் தினம் 2025 - செப்டம்பர் 16

- 1987 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட சுற்றுச்சூழல் ஒப்பந்தமான மான்ட்ரியல் நெறிமுறையை நினைவு கூரும் விதமாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 2009 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் தேதியன்று, வியன்னா உடன்படிக்கை மற்றும் மான்ட்ரியல் நெறிமுறை ஆகியவை ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றில் உலகளாவிய ஒப்புதலை அடைந்த முதல் ஒப்பந்தங்களாக மாறியது.
- ஓசோன்-குறைப்பு பொருட்கள் (ODS) என குறிப்பிடப்படும் மனிதனால் உருவாக்கப் பட்ட சுமார் 100 இரசாயனங்களின் உற்பத்தி மற்றும் நுகர்வை இந்த நெறிமுறை ஒழுங்குபடுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "From science to global action" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★